‘இந்தியா’ கூட்டணி ஆட்சிக்கு வந்தால்

# வக்பு சட்டம் குப்பைத் தொட்டியில் வீசப்படும்!

## தேஜஸ்வி யாதவ் பிரசாரம்!

கதிஹார், அக். 28 -

பீகாரில் அடுத்த மாதம் சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ளதையொட்டி, இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளரான ராஷ்டிரிய ஜனதா தள (ஆர்ஜேடி) தலைவர் தேஜஸ்வி யாதவ் நேற்று முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் கதிஹார், கிஷன்கஞ்ச், அராரியா மாவட்டங்களில் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் கூறியதாவது:

ஆர்ஜேடி தலைவரான எனது தந்தை லாலு பிரசாத் வகுப்புவாத சக்திகளுடன் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளவில்லை. ஆனால், முதல்வர் நிதிஷ்குமார் அத்தகைய சக்திகளை எப்போதும் ஆதரிக்கிறார். அதனால்தான் ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் துணை அமைப்புகள் மாநிலத்திலும் நாட்டிலும் வகுப்புவாத வெறுப்பை பரப்புகின்றன. இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் வக்பு சட்ட திருத்தத்தை நாங்கள் குப்பை தொட்டியில் வீசி எறிவோம். இந்தத் தேர்தல் அரசியலமைப்பு, ஜனநாயகம் மற்றும் சகோதரத்துவத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டம்.

முடிதிருத்தும் தொழிலாளிகளுக்கு ரூ.5 லட்சம் வட்டியில்லா கடன் வழங்குவோம். சமீபத்தில் அமித் ஷா பீகாருக்கு வந்தபோது, தேர்தலில் போட்டியிட விட மாட்டேன் என்று எங்களை மிரட்டினார். நான் போராடுவேன், நான் வெற்றி பெறுவேன். நாங்கள் பீகாரிகள், உண்மையான பீகாரிகள், வெளியாட்களுக்கு நாங்கள் பயப்படுவதில்லை. ஒரு பீகாரி மற்ற அனைவரையும் விட வலிமையானவர்.

இவ்வாறு தேஜஸ்வி யாதவ் கூறினார்.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்!

## தென் ஆப்பிரிக்க அணி அறிவிப்பு!

கேப்டவுன், அக். 28 –

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர்களில் விளையாட உள்ளது.

இதில் இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற உள்ளது. அதன்படி இந்தியா தென் ஆப்பிரிக்கா இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நவம்பர் 14ம் தேதி ஈடன் கார்டனில் தொடங்க உள்ளது. இது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர் என்பதால் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.





வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கையாக சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தூர் வாரும் பணிகளை தலைமை செயற்குழு உறுப்பினரும் , அம்பத்தூர் மண்டலக் குழுத் தலைவர் வழக்கறிஞர் பி.கே.மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார்.

### தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 38/சிபிடி, பேரவை இணைப்பு எண். 26) **வடசென்னை மின்திட்ட** நிர்வாகிகள் தேர்தல், கழகத்தின் தணிக்கைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் அ.சரவணன் அவர்களை மேலிடப் பார்வையாளராகவும், பேரவையின் இணைப் பொதுச்செயலாளர் ஜெ.விஜயகுமார் அவர்களை தேர்தல் ஆணையாளராகவும், பேரவைச் செயலாளர் என்.தனசேகரன் அவர்களை துணை தேர்தல் ஆணையாளராகவும் கொண்டும் நடத்தப்பட்டது. அதன்படி கீழ்க்கண்டவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று நிர்வாகிகளாக தேர்வு பெற்றுள்ளனர்.

**வடசென்னை மின் திட்டம்**

திட்டத் தலைவர் – M. நாகராஜ்

திட்ட துணைத் தலைவர்கள்–1)C. சிவப்பிரகாசம், 2) E. முனுசாமி, 3) A. ராஜேந்திரன்

திட்டச் செயலாளர்– K. சசிகுமார்

திட்ட துணைச் செயலாளர்கள்–1) R. சங்கர், 2) K. மாறன், 3) V. வேதமணி

திட்டப் பொருளாளர்– D. அருள்

கோட்டச் செயலாளர்கள்–1) A. பாபுராஜ் (மத்திய கோட்டம்), 2) S. தினேஷ்குமார் (வியாசர்பாடி), 3) R. ஜெகந்நாதன் (பொன்னேரி),4) A. ஹரிஷ்குமார் (பெரம்பூர்), M. இளங்கோவன் (தண்டையார் பேட்டை)

இடம்:கலைஞரகம்
நாள்:27.10.2025

**மு.சண்முகம், Ex.MP**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

வட்டச் செயலாளர் தி.சார்லஸ் நிகழ்ச்சி ஏற்பாடு! “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்ட

# மதுரவாயல் 153 வது வட்ட பி.எல்.ஏ.2 - பி.டி.ஏ. பாகப் பொறுப்பாளர்களுக்கு பரிசளிப்பு விழா!

## சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வழங்கினார்!

சென்னை, அக். 28

தமிழ்நாடு முதலமைச்சர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரிலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் படியும், சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, 153 வது வட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக பணியாற்றிய பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA உறுப்பினர்களுக்கு வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் பரிசு வழங்கும் விழா (26.10.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு, போரூர், எஸ்.பி.பேலஸ், சூப்பர் சரவணா ஸ்டோர் எதிரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வட்டக் கழக அவைத் தலைவர் க. நடராஜன் தலைமை தங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு பாக முகவர்கள் பணிகள் பற்றியும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் சமூக வலைதளங்களில் ஆற்றவேண்டிய செயல்பாடுகள் குறித்தும், ஒன்றிய அரசின் துணையுடன் தேர்தல் கமிஷன் கொண்டு வரும் “எஸ்.ஐ.ஆர் “ பற்றியும் சிறப்புரை ஆற்றி நிர்வாகிகளுக்கு பரிசுகள் வழங்கினார்.

இந்நிகழ்விற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், பி.எம். செல்வராஜ், இரா.பால்பாண்டியன், சாந்தி இராமலிங்கம், ஜி.இராமலிங்கம், தீனா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு மதுரவாயல் தெற்கு பகுதி, 153 வது வட்டத்திற்குட்பட்ட BLA2, BDA மற்றும் பாக பொறுப்பாளர்கள் த.பாலாஜி, முரளிகிருஷ்ணன், பொன்ராமசாமி, விஜயா, இஸ்மாயில், ஏழுமலை, செல்லமுத்து, த.சுகுமார்,

ராஜ்மல்கான், அ.ரவி, துர்யபிரகாஷ், பிரபு, சிவா, மாறன், சஞ்சய், மகேஷ், லோகேஷ், பரத்குமார், பிரகாசம், கௌரிசங்கர், கிளாரா, கிரேஸ், செல்வராஜ், பஷீர், பிரதீப், சதீஷ்குமார், லோகநாதன், ஆனந்தராஜ், கந்தன், வடிவேலு, கோவர்தனன், ஜானகிராமன், நாகராஜ், தூயவன், கண்ணன், பன்னீர்செல்வம், சந்தோஷ், சுந்தராஜன், மணிகண்டன், ராஜேந்திரன், ரமணன், ஜான்சி, பாஸ்கர் மேலும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியாக வட்டக் கழக துணைச் செயலாளர் பால் ரவி நன்றி கூறினார்.





சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதுரவாயல் தெற்கு பகுதி, 153 வது வட்டத்தில் ”ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்கையில் சிறப்பாக பணியாற்றிய பாக பொறுப்பாளர்கள், பி.எல்.ஏ.2–பி.டி.ஏ. உறுப்பினர்களுக்கு வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி நிர்வாகிகளுக்கு பரிசுகள் வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




இதய அஞ்சலி

கழக துணை அமைப்பு செயலாளர்
திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர்
வழக்கறிஞர் **ப.தாயகம்கவி** M.A., B.L., M.L.A.,
அவர்களின் தாயார்

திருமதி.**ப.சௌந்தரிஅம்மாள்**
வயது : 97

27.10.2025 அன்று **இயற்கை எய்தினார்.**
அம்மையாரின் இறுதி ஊர்வலம் 28.10.2025 அன்று
மதியம் 2.00 மணிக்கு 15/9 தலையாரி தெரு
மேற்கு மாம்பலம் சென்னை - 33-ல் உள்ள
இல்லத்தில் இருந்து புறப்பட்டு கண்ணம்மாபேட்டை
இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும்.

மாண்புமிகு அமைச்சர்
**பி.கே.சேகர்பாபு**
இந்து சமய அறநிலையத்துறை

**எம்.சாமிக்கண்ணு** தெற்கு பகுதி செயலாளர்
**செ.தமிழ்வேந்தன்** வடக்கு பகுதி செயலாளர்

ஆழ்ந்த இரங்கலுடன்

IT WING **எஸ்.கௌதம்** B.B.A., LLB.,
தொகுதி ஒருங்கிணைப்பாளர்

தகவல் தொழில்நுட்ப அணி – திரு.வி.க.நகர் தொகுதி